இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 05-07-2025

# ஓரணியில் தமிழ்நாடு!

“ஓரணியில் தமிழ்நாடு” என்ற மாபெரும் பரப்புரைப் பயணத்தைத் தொடங்கி வைத்திருக்கிறார், தி.மு.க. தலைவரும், மாண்புமிகு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஜூலை 1 ஆம் தேதி அன்று அண்ணா அறிவாலயத்தில் இந்த பரப்புரைப் பயணத்தைத் தொடங்கி வைத்தார் முதலமைச்சர் அவர்கள். 45 நாட்கள் தி.மு.க. படையானது தமிழ்நாடு முழுவதும் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்திக்க இருக்கிறது. தலைவரின் - முதலமைச்சரின் தூதுவர்களாக இவர்கள் மக்களைச் சந்திப்பார்கள்.

இந்தச் சந்திப்பின் போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய விரும்பும் குடும்பங்கள் தங்களை இணைத்துக் கொள்ளலாம். தி.மு.க.வில் சேர ஆர்வமுள்ளவர்கள் செயலி மற்றும் நேரடிப் படிவம் மூலம் பதிவு செய்யப்படுவார்கள். திராவிட முன்னேற்றக் கழகமானது, காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே இருந்திருக்கிறது. அதனால்தான் 75 ஆண்டுகளைக் கடந்தும் அதே இளமை மிடுக்கோடு இருக்கிறது.

**இளைஞர்களால், இளைஞர்களுக்காக, எதிர்கால நன்மைக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் இந்த இயக்கத்தை அடிப்படைக் கொள்கைகளில் இருந்து மாறாமல், அதே நேரத்தில் காலத்தின் தன்மைக்கு ஏற்ப பரப்புரை உத்திகளை மாற்றிக் கொண்டே செயல்பட்டு வந்தார்கள்.**

**பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் காலம், மேடைகளின் காலமாக இருந்தது. தலைவர் கலைஞர் காலத்தில் பத்திரிக்கைகள், இதழ்கள் முக்கியப் பங்கு ஆற்றியது. இருந்தாலும் மக்களோடு மக்களாக இணைந்து செயல்பட்டார்கள்.**

**அதே வழியில்தான் மக்களோடு மக்களாக இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். இன்றைய தினம் தொலைக்காட்சி, சமூக வலைதளங்கள், சமூக ஊடகங்கள் அதிகம் வலிமை பெற்றுள்ளன. தான் சொல்ல வேண்டியதை அடுத்த ஒரு நிமிடத்தில் கொண்டு சேர்க்க ஊடக வலிமை இருந்தாலும் மக்களை நேரடியாகச் சந்திப்பதில் உறுதியாக இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் அவர்கள். அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும், கட்சி நிகழ்ச்சிக்காக வந்தாலும் நடைபயணங்கள் மூலமாக மக்களைச் சந்தித்து அவர்களுடன் உரையாடுவதை தொடர்ந்து வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.**

குறைந்தது ஐந்து கிலோ மீட்டர் முதல் அதிகபட்சமாக பத்து கிலோ மீட்டர் தூரம் வரை நடந்து சென்று மக்களைச் சந்திக்கிறார் முதலமைச்சர் அவர்கள். மக்கள் முகங்களில் உள்ள மகிழ்ச்சியை அறிகிறார். பல்வேறு திட்டங்களின் மூலமாக பயனடைந்த மக்கள் அவருக்கு நன்றியைத் தெரிவிக்கிறார்கள். பெண்கள், இளைஞர்கள், கல்லூரி மாணவிகள், குழந்தைகள் என அவர் செல்லும் சாலைகள் அனைத்திலும் மக்கள் அலை அலையாக வருகிறார்கள். இன்னும் சொன்னால் அவர் முகத்தைப் பார்க்கவும் மக்கள் கூட்டம் திரள்கிறது. அருகில் வரவும், கை கொடுக்கவும் அலைமோதுகிறார்கள். இந்த மக்கள் சந்திப்பானது, மக்கள் மனங்களை அறியும் சந்திப்பாக இருக்கிறது.

‘மக்களோடு செல், மக்களுக்காக நில்’ என்று சொல்வாரே அண்ணா. அத்தகைய நோக்கம் கொண்டதாக இவை அமைந்துள்ளன. இதே பாணியை தான் மட்டுமல்ல, கழகத்தின் ஒவ்வொரு தொண்டரும் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மக்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடுதல் என்ற பாணியை ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வடித்துக் கொடுத்திருக்கிறார்.

“தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கான முயற்சி இது” என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பட்டியலிட்டு பொதுமக்களுக்கு இவர்கள் சொல்ல இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சிக்கிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். வஞ்சிப்பது மட்டுமே பா.ஜ.க.வின் வழக்கம் ஆகும். மக்களுக்கு நன்மை செய்ய பா.ஜ.க.வுக்குத் தெரியாது. ஆனால் பொய்களின் மூலமாக திசை திருப்புவார்கள்.

காங்கிரஸ் ஆட்சியை விட, பா.ஜ.க. ஆட்சியில் தமிழ்நாட்டுக்கான நிதியை அதிகமாகக் கொடுத்துவிட்டோம் என்ற பொய்யைத் திரும்பத் திரும்ப பிரதமர் முதல் அனைவரும் சொல்லி வருகிறார்கள். உள்துறை அமைச்சர் அமித்ஷா இதனை அடிக்கடி சொல்லி வருகிறார். எந்தெந்த திட்டங்களின் மூலமாக இதனைத் தருகிறார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. சொல்லவும் முடியாது. ஒன்றிய அரசின் திட்டங்களாக அறிவிக்கப்படும் திட்டங்களுக்கும் கூட தமிழ்நாடு அரசுதான் நிதியைக் கொடுத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல கூட்டங்களில் ஆதாரங்களுடன் எடுத்துச் சொல்லி விட்டார்கள். ‘மாப்பிள்ளை அவர்தான், ஆனா சட்டை என்னுடையது’ என்ற திரைப்பட டயலாக்கை உதாரணமாகச் சொல்லி புரியவைத்து விட்டார். அதற்கான விளக்கத்தை இன்று வரை பா.ஜ.க. தரப்பு சொல்லவில்லை.

‘தமிழ்நாட்டுக்காக கடந்த பத்தாண்டு காலத்தில் செய்து தரப்பட்ட சிறப்புத் திட்டம் என்ன?’ என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சரின் ஒற்றைக் கேள்வி. இவர்கள் அறிவிப்பில் மதுரையில் ‘எய்ம்ஸ்’ மருத்துவமனை அமைக்கப்படும் என்பது மட்டும்தான் சிறப்புத் திட்டம் ஆகும். 2015 ஆம் ஆண்டு அன்றைய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியால் அறிவிக்கப்பட்ட திட்டம் அது. 2019 தேர்தலுக்கு முன்னதாக அடிக்கல் நாட்டினார் பிரதமர். இப்போது நாம் 2025 ஆம் ஆண்டில் இருக்கிறோம். அப்படியே கிடப்பில் கிடக்கிறது. சமீபத்தில் ஒரு வீடியோவை வெளியிட்டு இருக்கிறார்கள். வீடியோ தயாரிக்க ஆறு ஆண்டுகள் ஆகி இருக்கிறது. இதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு பா.ஜ.க. தரும் மரியாதை ஆகும்.

இப்படி தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைய வேண்டும் - ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்கான முயற்சியை திமுகழகம் தொடங்கி இருக்கிறது.

**மக்களிடம் இருந்து கற்றுக் கொள்வதும், மக்களுக்குச் சொல்வதுமான ‘ஓரணியில் தமிழ்நாடு’ ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. தி.மு.க. என்பது மக்கள் இயக்கம் என்பதன் அடையாளம்தான் இந்தப் பரப்புரையாகும். ஒரு காலத்தில் திண்ணைப் பரப்புரை செய்வார்கள். இது மண்ணைக் காக்கும் பரப்புரையாகும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச். அசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அ. அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, அடையாறு, சாஸ்திரி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை திறந்து வைத்து, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச். அசன் மௌலானா, துணை மேயர் மு. மகேஷ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அ. அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டி.எஸ். செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சேலம் மாவட்டம் – தாதம்பட்டி

# நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் - 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

சேலம், ஜூலை 5 -

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2025) காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாவட்டம், தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களை ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் திறந்து வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து, தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர், சுற்று லாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத்தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 போன்ற திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள்.

அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம், தாதம்பட்டியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினையும், ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் வக்கீல் காடு, அசோக் நகர், குமரிகிரிப் பேட்டை, ஆண்டிப்பட்டி, சந்தைப்பேட்டை, சின்னமாப்பாளையம், கரீம் காம்பவுண்டு ஆகிய 7 இடங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களையும் திறந்து வைத்தார்கள்.

தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமானது காந்தி நகர் (அம்மாப்பேட்டை), வள்ளுவர் காலனி, அல்லிக்குட்டை, வீராணம் மற்றும் தாதம்பட்டி பகுதியில் உள்ள 35,000 மக்கள் தொகை பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, 15வது நிதி குழுவின் கீழ் ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்களான வக்கீல் காடு, அசோக் நகர், குமரிகிரிப்பேட்டை, ஆண்டிப்பட்டி, சந்தைப் பேட்டை, சின்ன மாப்பாளையம், கரீம் காம்பவுண்டு ஆகிய பகுதிகளில் புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சியில் 16 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது ஒரு புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு மொத்தம் 17 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் மற்றும் 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் தற்போது 7 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு மொத்தம் 32 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்படவுள்ளது.

தாதம்பட்டி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலை யத்தில் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளுக்கான சிகிச்சை, மகப்பேறு மருத்துவம், கர்ப்பிணி மற்றும் குழந்தைகளுக்கான தடுப்பூசி, மக்களைத் தேடி மருத்துவம், தொற்று நோய், தொற்றா நோய் தொடர்பான சிகிச்சைகளும் மற்றும் மேற்கண்ட அனைத்து சேவைகளும் 24 மணி நேரமும் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி, திருமணிமுத்தாற்றை தூர்வாரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். அதன் பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

சேலம் மாநகராட்சியில் புனரமைக்கப்பட்ட திருமணிமுத்தாற்றில் கரைகளில் இருபுறமும் நீர் செல்வதற்கு இடையூராக தேங்கியுள்ள மண் மற்றும் செடிகளை தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் ஒரு மாதம் காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சேலம் மாநகராட்சி அணைமேடு முதல் செவ்வாய்ப்பேட்டை வரை 2.5 கி.மீ தூரத்திற்கு ரூ.25 இலட்சம் மதிப்பில் திருமணிமுத்தாற்றை தூர்வாரும் பணிகள் நடைபெறவுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.




முதலமைச்சரும், கழக தலைவருமான, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் “ஓரணியில் தமிழ்நாடு” கழகத்தில் உறுப்பினர் சேர்க்கையில் கழகத்திற்கு உறுப்பினர்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி ஈரோடு கிழக்கு தொகுதி அம்பேத்கர் நகர், மேற்கு தொகுதியில் எஸ்.எஸ்.பி.நகர் ஆகிய இரண்டு இடங்களில் உறுப்பினர் சேர்க்கையை வீடு வீடாகச் சென்று துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகரக் கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.